

முதலமைச்சர் மு.க.ஸ்டாலின் அவர்களை நேற்று (22.5.2023) முகாம் அலுவலகத்தில், திருநெல்வேலி மத்திய மாவட்டக் கழகச் செயலாளராக நியமிக்கப்பட்டுள்ள டி.பி.எம்.மைதீன்கான் சந்தித்து வாழ்த்துப் பெற்றார். உடன் திருநெல்வேலி மாவட்டத்தைச் சேர்ந்த நாடாளுமன்ற உறுப்பினர் ஞானதிரவியம், திருநெல்வேலி மாநகர கழகச் செயலாளர் சுப்பிரமணியன், மாநகர மேயர் பி.எம். சரவணன், வர்த்தக அணி இணைச் செயலாளர் மாலைராஜா மற்றும் நிர்வாகிகள் உள்ளனர்.



முதலமைச்சர் மு.க.ஸ்டாலின் அவர்கள் தலைமையில் நேற்று (22.5.2023) தலைமைச் செயலகத்தில், நகராட்சி நிர்வாகம் மற்றும் குடிநீர் வழங்கல் துறை சார்பில் கழிவுநீர்த் தொட்டிகள் மற்றும் பாதாளச் சாக்கடைகளில் ஏற்படும் இறப்புகளை தடுப்பதற்காக மேற்கொள்ளப்படும் நடவடிக்கைகள் குறித்த ஆய்வுக் கூட்டம் நடைபெற்றது. இந்தக் கூட்டத்தில், நகராட்சி நிர்வாகத் துறை அமைச்சர் கே.என். நேரு, ஊரக வளர்ச்சித் துறை அமைச்சர் இ. பெரியசாமி, தலைமைச் செயலாளர் முனைவர் வெ.இறையன்பு, நகராட்சி நிர்வாகம் மற்றும் குடிநீர் வழங்கல் துறை கூடுதல் தலைமைச் செயலாளர் சிவ் தாஸ் மீனா, பெருநகர சென்னை மாநகராட்சி ஆணையர் / கூடுதல் தலைமைச் செயலாளர் மரு. ஜெ. ராதாகிருஷ்ணன், மருத்துவம் மற்றும் மக்கள் நல்வாழ்வுத் துறை முதன்மைச் செயலாளர் ககன்தீப் சிங் பேடி, ஊரக வளர்ச்சி மற்றும் ஊராட்சித் துறை முதன்மைச் செயலாளர் முனைவர் பி. செந்தில்குமார், நிதித்துறை முதன்மைச் செயலாளர் த. உதயச்சந்திரன், சென்னைப் பெருநகர் குடிநீர் வழங்கல் மற்றும் கழிவுநீரகற்று வாரியத்தின் மேலாண்மை இயக்குநர் கிர்லோஷ் குமார், பேரூராட்சிகளின் இயக்குநர் கிரண் குராலா, நகராட்சி நிர்வாகத் துறை இயக்குநர் பா. பொன்னையா மற்றும் அரசு உயர் அலுவலர்கள் கலந்து கொண்டனர்.

## கோடி கோடியாய்

# சொத்துக்குவித்த அ.தி.மு.க. அமைச்சர்கள்!

## குற்றப்பத்திரிகை தாக்கல்!

சென்னை, மே 23-

அ.தி.மு.க .ஆட்சியில் சுகாதாரத்துறை அமைச்சராக இருந்த விஜயபாஸ்கருக்கு எதிராக புதுக்கோட்டை தலைமை குற்றவியல் நீதிமன்றத்தில் லஞ்ச ஒழிப்புத் துறை குற்றப்பத்திரிகை தாக்கல் செய்துள்ளது. விஜயபாஸ்கர் அமைச்சராக இருந்த 2016 ஏப்ரல் 1 முதல் 2021 மார்ச் 31 வரையிலான காலத்தில், 27 கோடியே 22 லட்சம் ரூபாய் அளவிற்கு முறைகேடாக சொத்து சேர்த்ததாக, வழக்குப்பதிவு செய்யப்பட்டதாக கூறியுள்ளது.

அதனடிப்படையில் நடத்தப்பட்ட விசாரணையில் 56 இடங்களில் சோதனை நடத்தப்பட்டு, விஜயபாஸ்கர், அவரது மனைவி ரம்யாவின் உடந்தையுடன் அவரது பெயரிலும், குடும்பத்தினரின் பெயரிலும் ராசி புளூ மெட்டல்ஸ், V INFRASTRUCTURE. ராசி என்டர்பிரைசஸ் ஆகிய பெயர்களில் நிலங்கள், தொழில் முதலீடு, வங்கி இருப்புகள், இயந்திர தளவாடங்கள், வாகனங்கள் மற்றும் ஆபரணங்கள் என முதலீடு செய்து மொத்தம் 35 கோடியே 79 லட்சத்து 90 ஆயிரத்து 81 ரூபாய் அளவிற்கு வருமானத்திற்கு அதிகமாக சொத்து சேர்த்ததாக குற்றப்பத்திரிகையில் தெரிவிக்கப்பட்டுள்ளது.

விசாரணை முடிவடைந்த நிலையில், அ.தி.மு.க. முன்னாள் அமைச்சர் விஜயாஸ்கர் மற்றும் அவரது மனைவி ரம்யா ஆகியோர் மீது குற்றப்பத்திரிகை தாக்கல் செய்யப்பட்டுள்ளது.

### கே.பி.அன்பழகன்!

அதிமுக ஆட்சியில் உயர் கல்வித் துறை அமைச்சராக இருந்தவர் K.P.அன்பழகன். இவர் அமைச்சராக இருந்த 2016 ஏப்ரல் 1 முதல் 2021 மார்ச் 31 வரையிலான காலத்தில் அவரது பெயரிலும், அவரது மனைவி மல்லிகா, மகன்கள் சசிமோகன், சந்திரமோகன் ஆகியோர்கள் பெயரில் மொத்தம் 11 கோடி ரூபாய் அளவிற்கு வருமானத்துக்கு அதிகமாக சொத்து சேர்த்ததாக, வழக்குப்பதிவு செய்யப்பட்டது. அதன் தொடர்ச்சியாக நடந்த விசாரணையில், 58 இடங்களில் சோதனை நடத்தப்பட்டு ஆவணங்கள் கைப்பற்றப் பட்டன.

அன்பழகன் அவரது உறவினர்களான ரவிசங்கர், சரவணன், சரவணக்குமார் மற்றும் நெருங்கிய கூட்டாளி களான மாணிக்கம், மல்லிகா, தனபால் ஆகியோர் உடந்தையுடன் அவரது பெயரிலும், அவரது குடும்பத்தினர் பெயரிலும் நிலங்கள், தொழில் முதலீடு, வங்கி இருப்புகள், நிலம், இயந்திர தளவாடங்கள், ஆபரணங்கள், வாகனங்கள் என சொத்துக்களாகவும், முறைகேடாக பெற்ற பணத்தை அவருக்கு சொந்தமான சரஸ்வதி பச்சியப்பன் கல்வி அறக்கட்டளைக்கு அனுப்பியதன் வழியாகவும் மொத்தம் 45 கோடியே 20 லட்சத்து 53 ஆயிரத்து 363 ரூபாய் வருமானத்திற்கு அதிகமாக சொத்து சேர்த்துள்ளதாக, தருமபுரி தலைமைக் குற்றவியல் நடுவர் நீதிமன்றத்தில் லஞ்ச ஒழிப்புத்துறை குற்றப்பத்திரிகை தாக்கல் செய்துள்ளது.

## கழகப் பொதுக் குழு உறுப்பினர் ஆர்.பி.மதியழகன் இல்ல மண விழா!

### அமைச்சர்கள் கே.கே.எஸ்.எஸ்.ஆர்.ராமச்சந்திரன், தங்கம் தென்னரசு வாழ்த்துகின்றனர்!



விருதுநகர், மே 23-

விருதுநகரில் தி.மு.க. பொதுக் குழு உறுப்பினர் ஆர்.பி.மதியழகன் இல்லத் திருமண விழா நடைபெறுகிறது.

ஆர்.பி.மதியழகன் - பாண்டியம்மாள் மகள் எம்.தேன்மொழி, ஆர்.மாரியப்பன் - எம்.ஜெகதாம்பாள் மகன் எம்.மணிராஜ் ஆகியோரின் திருமணம் விருதுநகர் அருப்புக்கோட்டை ரோட்டில் உள்ள கற்குவேல் அய்யனார் திருமண மண்டபத்தில் 25.05.2023 - வியாழக்கிழமையன்று காலை 9 மணியளவில் அமைச்சர்கள் தெற்கு மாவட்டக் கழகச் செயலாளர் கே.கே.எஸ்.எஸ்.ஆர். ராமச்சந்திரன் மற்றும் வடக்கு மாவட்டக் கழகச் செயலாளர் தங்கம் தென்னரசு ஆகியோர் நடத்தி வைக்க உள்ளார்கள்.

விருதுநகர் சட்ட மன்ற உறுப்பினர் ஏ.ஆர்.ஆர். சீனிவாசன் ஜெயபாரதி, ஏ.ஆர். ஆர்.கோவிந்தராஜ் தமிழ்ச் செல்வி ஆகியோர் முன்னிலை வைக்க உள்ளார்கள். நகர திமுக செயலாளர் எஸ். ஆர்.எஸ்.தனபாலன் உட்பட மாவட்ட, நகர, ஒன்றிய, பேரூர் கழக நிர்வாகிகள், அணிகளின் நிர்வாகிகள், நகர்மன்ற தலைவர் மற்றும் துணைத் தலைவர், நகர்மன்ற உறுப்பினர்கள் கலந்து கொள்ள உள்ளனர்.

## இத்தாலியில் தீப்பிழம்பை கக்கும் எரிமலை!

ரோம், மே 23-

இத்தாலி தலைநகர் ரோமில் உள்ள கிழக்கு சிசிலியன் நகரத்தில் உள்ள மவுண்ட் எட்னாவில் எரிமலை வெடித்து சிதறி தீப்பிழம்பை கக்கி வருகிறது. தீப்பிழப்பு வழிந்து சாம்பல் அருகிலுள்ள விமான நிலையத்தின் விமான ஓடுபாதை வரை பரவியது. இதனால், கட்டானியாவிற்கு சேவை செய்யும் விமானங்கள் நேற்று முன்தினம் ரத்து செய்யப்பட்டன. 3,330 மீட்டர் (10,925 அடி) உயரம் கொண்ட இந்த எரிமலை வருடத்திற்கு பல முறை வெடித்து, சாம்பலை மத்திய தரைக்கடல் தீவில் கரைகிறது. கடைசியாக பெரிய அளவில் எரிமலை வெடிப்பு கடந்த 1992ம் ஆண்டில் ஏற்பட்டுள்ளது.

# ரூ.2,000 நோட்டுகளை மாற்ற சிவப்புக் கம்பளம் விரித்துள்ளார்கள்!

### ஒன்றிய முன்னாள் நிதியமைச்சர் ப.சிதம்பரம் விமர்சனம்!



சென்னை, மே 23 -

ரூ.2,000 நோட்டுகளை மாற்ற ஆவணங்களோ, அடையாள அட்டையோ தேவையில்லை என்று எஸ்.பி.ஐ. அறிவித்துள்ள நிலையில், முன்னாள் நிதியமைச்சர் ப.சிதம்பரம் இந்த அறிவிப்பை முன்வைத்து பல்வேறு கேள்விகளை எழுப்பியதோடு, அந்த நடவடிக்கையை கடுமையாக சாடியுள்ளார்.

எஸ்.பி.ஐ. அறிவிப்பு ரூ.2000 நோட்டுகளை வைத்திருப்போருக்கு சிவப்புக் கம்பளம் விரித்துள்ளது என்றும் அவர் கூறியுள்ளார்.

இது தொடர்பாக அவர் தனது டுவிட்டர் பக்கத்தில் கூறியிருப்பதாவது:

சாமானிய மக்களிடம் ரூ.2000 நோட்டுகள் புழக்கத்தில் இல்லவே இல்லை. 2016ல் அவை அறிமுகப்படுத்தப்பட்ட சில காலத்திலேயே சாமானிய மக்கள் அதனை புறக்கணித்துவிட்டனர். ஏனென்றால் அன்றாட சில்லறை புழக்கத்துக்கு ரூ.2000 நோட்டுகள் பயனற்றதாகவே இருந்தது. அப்படியென்றால் ரூ.2000 நோட்டுகளை யார் தான் வைத்திருந்தனர்? அதற்கான விடை உங்களுக்குத் தெரியும்.

ரூ.2000 நோட்டுகளை கருப்புப் பணத்தை ஒழிக்கவே கொண்டு வருகிறோம் என்ற பா.ஜ.க.வின் அறிவிப்பு இங்கே தவிடுபொடியாக்கப்பட்டுள்ளது. உண்மையில், ரூ.2000 நோட்டுகள் கருப்புப் பண பதுக்கல்காரர்கள் அவற்றை எளிதில் பதுக்கிவைத்துக் கொள்ள மட்டுமே உதவியது.

இப்போது ரூ.2000 நோட்டுகளை வைத்திருப்பவர்கள் அவற்றை மாற்றிக் கொள்ள சிவப்புக் கம்பளம் விரித்துள்ளனர். பாஜகவின் கருப்புப் பண ஒழிப்பு கொள்கை எங்கே போனது? 2016ல் ரூ.2000 நோட்டுகள் அறிமுகம் செய்யப்பட்டதே முட்டாள்தனமான முடிவு. 7 ஆண்டுகளுக்குப் பின்னராவது அந்த முட்டாள்தனமான முடிவை திரும்பப் பெற்றுள்ளதில் எனக்கு மகிழ்ச்சியே. இவ்வாறு அவர் பதிவிட்டுள்ளார்.

### கே.ஆர்.என்.ராஜேஸ்குமார் எம்.பி. கோரிக்கையை ஏற்று

# நாமக்கல் புறவழிச்சாலையில் ரெயில்வே மேம்பாலம்!

### தென்னக ரயில்வே அனுமதி!

நாமக்கல், மே 23-

நாமக்கல் மாவட்டம் களங்காணி இரயில்வே நிலையத்திலிருந்து நாமக்கல் இரயில்வே நிலையம் வரை உள்ள இரயில் பாதையில் இடைப்பட்ட மரூர்பட்டி கிராமம் வழியாக நாமக்கல் புறவழிச்சாலை அமைய உள்ளது. இப்புறவழிச்சாலை செல்லும் வழியில் அங்கு உள்ள இரயில் பாதையை கடக்க மேம்பாலம் அமைக்கப்பட வேண்டும்.

இம்மேம்பாலத்தை அமைப்பதற்கு மாநில நெடுஞ்சாலைத் துறைக்கும் தென்னக இரயில்வே துறைக்கும் புரிந்துணர்வு ஒப்பந்தம் பெற வேண்டி உள்ளது. இதுநாள் வரை இதற்கான ஒப்புதலை தென்னக இரயில்வே வழங்கவில்லை.

இந்நிலையில் தற்பொழுது நாமக்கல் கிழக்கு மாவட்ட செயலாளரும், மாநிலங்களவை உறுப்பினருமான கே.ஆர்.என்.இராஜேஸ்குமார், எம்.பி., 23.02.2023 ஆம் தேதி அன்று அனுப்பிய கடிதத்தின் கோரிக்கையை ஏற்று நாமக்கல் புறவழிச்சாலை திட்டத்தில் வரும் இரயில்வே பாதையில் மேம்பாலம் அமைக்க மாநில நெடுஞ்சாலைத் துறைக்கும், தென்னக இரயில்வே துறைக்கும் புரிந்துணர்வு ஒப்பந்தம் ஏற்படுத்தப்பட்டு உள்ளது. இதன் மூலம் மேம்பாலம் அமைக்க தேவையான திட்ட மதிப்பீடு தென்னக இரயில்வே தயாரித்து அதற்கான மதிப்பீட்டு தொகையை தமிழ்நாடு அரசின் நெடுஞ்சாலைத் துறையிடம் பெற்று மேம்பாலம் கட்டுமான பணியை தென்னக இரயில்வே மேற்கொள்ளும்.

### மதுரையில் இந்திய வழக்கறிஞர்கள் சங்க 8வது மாநில மாநாடு

# சென்னை உயர்நீதிமன்ற தலைமை நீதிபதி (பொறுப்பு) டி.ராஜா, அமைச்சர் எஸ்.ரகுபதி சிறப்புரை!

மதுரை, மே 23-

இந்திய வழக்கறிஞர்கள் சங்கம் 8வது மாநில மாநாடு மதுரை உலக தமிழ் சங்கம் கட்டிடத்தில் நடை பெற்றது. இதில் சென்னை உயர்நீதிமன்ற பொறுப்பு தலைமை நீதிபதி டி. ராஜா, சட்டத் துறை அமைச்சர் எஸ்.ரகுபதி கலந்து கொண்ட னர் இதில் முன்னாள் உச்சநீதிமன்ற தலைமை நீதிபதி வி.ஆர். கிருஷ்ண ஐயர், மூத்த வழக்கறிஞர் வான மாமலை, முன்னாள் வழக்கறிஞர் சங்க பொதுச் செயலாளர். ஜான் செல்வ ராஜ் ஆகியோரின் படங் களை உயர்நீதிமன்ற பொறுப்பு தலைமை நீதிபதி டி.ராஜா, சட்டத்துறை அமைச்சர் எஸ்.ரகுபதி, முன்னாள் நீதிபதி விமலா ஆகியோர் திறந்து வைத்த னர், பன்னிரண்டாம் வகுப்பு பொதுத் தேர்வில் 600 மதிப்பெண் எடுத்த திண்டுக்கல் மாணவி நந்தினிக்கு நீதிபதி ராஜா மற்றும் சட்டத் துறை அமைச்சர் ரகுபதி ஆகியோர் நினைவு பரிசுகளை வழங்கி கௌரவித்தனர்.

இதனைத் தொடர்ந்து நிகழ்ச்சியில் பேசிய சென்னை உயர்நீதிமன்ற பொறுப்பு தலைமை நீதிபதி டி ராஜா இந்தியாவில் மூன்று வருடத்தில் அம்பேத்கர் அவர்களால் அரசியல் அமைப்புச் சட்டம் உருவாக்கப்பட்டது, ஆனால் பாகிஸ்தானில் மூன்று முறை அரசியலமைப்புச் சட்டம் மாற்றி அமைக்கப்பட்டது,

உலக அளவில் பாதுகாப்பான சிறந்த அரசியல் சட்டம் உள்ள நாடு இந்தியா தான் என்றும்,

தமிழ்நாட்டில் மட்டும் தான் 14 பெண் நீதிபதிகள் தற்போது உள்ளனர், பெண்களும் நாட்டின் வளர்ச்சிக்கும் சீர்திரு த்தற்கும் பல்வேறு நடவடிக்கைகளை எடுத்து உள்ளார்கள்,

நாடு உயர்வதற்கு ஆணும் பெண்ணும் உயர வேண்டும்,

இந்திய நாட்டில் பிறப்பதும் வளர்வதும் பெருமை கொள்ள வேண்டும், பெண்களுக்கு முழு வாய்ப்பையும் முழு உரிமையையும் கொடுப்போம் எனவும் கூறினார் .

இதனை தொடர்ந்து பேசிய சட்டத்துறை அமைச்சர் எஸ்.ரகுபதி,

சமூக சமத்துவ எல்லோருக்கும் எல்லாம் என்ற திராவிட மாடல் உள்ளது, எல்லாருக்கும் எல்லாமும் கிடைக்க வேண்டும் என்பது தான் தமிழ்நாடு முதலமைச்சர் தளபதி அவர்களின் ஆட்சி என்றும்,

தமிழகத்தில் 100 ஆண்டுகளுக்கு முன் பெண்களுக்கு வாக்கு உரிமை உள்ளிட்ட சம உரிமை கொண்டு வர பாடுபட்டனர்.

சென்னை நீதி மன்ற தீர்ப்பு என்பது மாற்றி எழுத முடியாத தீர்ப்பு என்பதற்கு சான்று ஜல்லிக்கட்டு தீர்ப்பு எனவும்,

உயர்நீதிமன்றமும் மதுரை கிளையும் இந்திய ஒன்றியத்தில் அதிகமான வழக்குகளில் தீர்ப்பு வழங்கி முடித்து வைத்துள்ளது என்ற பெருமை உள்ளது. அதற்கு வழக்கறிஞர்கள் உங்களின் ஒத்துழைப்பும் உள்ளது எனவும் பேசினார்.

இந்த நிகழ்ச்சியில் இந்திய வழக்கறிஞர் சங்க துணை தலைவர் வழக்கறிஞர்கள் சாமிதுரை, சுப்ரமணியன் உள்ளிட்ட ஏராளமான வழக்கறிஞர்கள் இதில் கலந்து கொண்டனர்.



தூத்துக்குடி மாவட்டம், திருச்செந்தூர் பகத்சிங் பேருந்து நிலையம் அருகில் மருத்துவம் மற்றும் மக்கள் நல்வாழ்வுத்துறை மற்றும் BANYAN ACADEMY சார்பில் புதிதாக தொடங்கியுள்ள ஆதரவற்ற மனநலம் பாதிக்கப்பட்டவர்களுக்கான அவசர சிகிச்சை மற்றும் மீட்பு மையத்தை பயன்பாட்டிற்கு திறந்து வைத்து, அதனைத் தொடர்ந்து நடைபெற்ற விழாவில் தூத்துக்குடி பாராளுமன்ற உறுப்பினரும், திமுக துணைப் பொதுச்செயலாளருமான கனிமொழி கருணாநிதி எம்.பி. அவர்கள் சிறப்புரையாற்றினார் உடன், சமூகநலன் மற்றும் மகளிர் உரிமைத்துறை அமைச்சர் பெ.கீதாஜீவன், மாவட்ட ஆட்சியர் செந்தில்ராஜ், மாநகராட்சி மேயர் ஜெகன் பெரியசாமி, ஒன்றிய செயலாளர் ரமேஷ், நகரச் செயலாளர் சுடலை மற்றும் பலர் கலந்துகொண்டனர்.